// மின்னஞ்சல் மூலமாக //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்

ந.க.எண். 2171 /அ1/2025, நாள். 19.05.2025.

---

பொருள் : பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – அனைத்து வகை ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கான மாறுதல் – 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே அலுவலகத்தில் / பதவியில் பணிபுரிபவர்களுக்கு மாறுதல், விருப்ப மாறுதல் மற்றும் பதவி உயர்வு – கலந்தாய்வு நடத்துதல் தொடர்பாக – அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை :

1. அரசாணை எண்.151, பள்ளிக் கல்வி (SE1(1) துறை, நாள்.09.09.2022.
2. அரசாணை எண்.149, பள்ளிக் கல்வி (SE5(1) துறை, நாள்.01.07.2024.
3. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.026220/அ3/இ1/2025, நாள்.16.05.2025.

-----

பார்வை – 2 ல் காணும் அரசாணையில் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின் அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே பணியிடத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளர் / பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் / உதவியாளர்/ இளநிலை உதவியாளர்/ சுருக்கெழுத்துத் தட்டச்சர், தட்டச்சர், பதிவறை எழுத்தர், பதிவறை உதவியாளர் மற்றும் ஓட்டுனர் ஆகியோர்களுக்கு இணைப்பில் காணும் அட்டவணையின்படி கலந்தாய்வு நடத்திட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு பின்வரும் அறிவுரையினை பின்பற்றி வருவாய் மாவட்டத்திற்குள் கலந்தாய்வு நடத்திட பார்வை – 3 ல் காணும் கடிதத்தில் வழிகாட்டுதல் நெறிமுறை ஆணை பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி வழிகாட்டுதல் ஆணையினை பின்பற்றி ஒரே அலுவலகத்தில் / பள்ளிகளில் பணிபுரியும் மேற்படி பணியாளர்களுக்கு கலந்தாய்வு நடத்த பெறப்பட்ட வழிகாட்டு நெறிமுறையினை இத்துடன் இணைத்து உடனடி நடவடிக்கைக்காக அனைத்து அலுவலகம் மற்றும் உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பலாகிறது.

மேலும், மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் 21.05.2025 மாலை 5.00 மணிக்குள் இவ்வலுவலக அ1 பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு :

1. அரசாணை 149.
2. கலந்தாய்வு அட்டவணை.
3. பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) கடித நகல்.

முதன்மைக் கல்வி அலுவலருக்காக,
வேலூர்.

பெறுநர் :

1. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   (இடைநிலைக் கல்வி/ தொடக்கக் கல்வி/ தனியார் பள்ளிகள்).
   வேலூர்.
3. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் , வேலூர்.
4. அனைத்து அரசு உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு.

நகல் :

கோப்பிற்கு.

(ப.க)